**கொழும்புப் பல்கலைக்கழகம் - 2016**

-------------------------------------------------------------------------

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழங்கள் அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்திற்கு முரணாக மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர் கல்வி அமைச்சரின் விதப்புரையுடன் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி கலம்பு ஸயன்ஸ் அன்ட் டென்னொலொஜி செல் என்ற பேரில் பிணையினால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்று 2013 ஆண்டின் போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட பீடாதிபதி உட்பட 09 விரிவுரையாளர்கள் இக் கம்பனியின் பணிப்பாளர் சபையில் அங்கத்துவம் வகிப்பதனால் பல்கலைக்கழகத்தின் முழு நிருவாக அதிகாரம் கொண்டு காணப்படும் நிருவகிக்கப்படும் கம்பனி ஒன்றென தெளிவாகின்றது. இதன் பிரகாரம் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் வரையறுக்கப்பட்ட கலம்பு ஸயன்ஸ் அன்ட் டெக்னொலொஜி செல் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் ஒன்றினைத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமெனினும், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ஒன்றித்த கணக்கு கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
இந்தக் கம்பனியின் தலைமை அலுவலகம் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு சொந்தமான கட்டிடமொன்றில் நிறுவப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாகக் காணப்படும் கணனிகள் துணைக் கருவிகள் உட்பட ஏனைய பௌதீக மற்றும் மனிதவளங்களை பயன்படுத்தியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக ஆதனங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக இசைவு உடன்படிக்கை ஒன்றிற்கு உட்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் வளங்களை பயன்படுத்தலுக்காக ரூபா 191,839 இற்கான தொகையொன்று மாத்திரம் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை**

நிதி நிலைமைக் கூற்றில் காணப்பட்ட ரூபா 35,296,230,000 தொகை பெறுமதியான காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக உருத்துறுதி மீளாய்வாண்டு இறுதி வரை பெற்றிருக்காததுடன் உரித்தாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக உபவேந்தர் 2017 ஆகஸ்ட் 17 ஆம் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

**2.3 பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 782,831 இற்கான 12 கடன் மீதிகள் 03 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அவற்றை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மருத்துவ பீட 04 ஊழியர்கள் பெற்றிருந்த கடனைத் தீர்க்காமல் சேவையில் இருந்து விளகியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 288,399 இற்கான கடன் மீதியொன்று அவர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. இந்தக் கடன்தொகை குறிப்பிட்ட ஆட்களுக்கு வழங்கப்பட்டு 5 வருடங்கள் முதல் 9 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அப் பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 30 கலாநிதிகளினால் உடன்படிக்கைகளை மீறியமை தொடர்பாக ரூபா 40,086,005 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. இவற்றில் கலாநிதிகள் 08 பேர்களிடம் ரூபா 8,121,094 இற்கான மீதி 11 வருடங்கள் முதல் 38 வருடங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்டதுடன் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம் II ஆம் பகுதியின் 15(V) ஆம் பிரிவு | ஏதேனும் உயர்கல்வி நிறுவனமொன்றினால் நடாத்தப்பட வேண்டிய பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனினும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் பல்கலைக்கழகத்தின் 04 பீடங்களில் 53 பாடநெறிகள் நடத்தப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஆ) | பல்கலைக்கழகங்கள் மானியங் கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்காக தாபன விதிக்கோவை<br>------------------------------------------------------- | |
| | (i) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா அனைத்து உத்தியோகத்தர்களினதும் உட்வருதல் மற்றும் வெளிச்செல்லல் ஆகிய நேரங்கள் பதிவு செய்ய வேண்டுமெனினும் 743 கல்விசார் உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்தி யிருக்காமல் சம்பளம் மற்றும் படிகள் என ரூபா 1,375,562,712 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) XXII ஆம் அத்தியாய த்தின் 18 - 3 ஆம் பிரிவுகள் | ஏதேனும் ஒரு நபரின் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த போது அவருக்கு எதிராக நடத்தப்படும் ஒழுக்காற்று விசாரணை விடயங்கள் கூடிய அளவு தாமதமின்றி பூர்த்தி செய்ய வேண்டும். கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் சேவையில் இருந்த ஆள் ஒருவர் 2005 திசெம்பர் 09 ஆம் திகதி முதல் அரைச் சம்பளத்துடனான வேலை இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஜுன் 30 திகதி வரை 11 வருடங்களும் 06 மாதங்களுக்குமாக அரைச் சம்பளமாக ரூபா 1,885,809 இற்கான தொகையொன்று செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிட்ட ஒழக்காற்று விசாரணை விடயங்கள் முடிவாகியிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------------------------------- | |
| | நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | (i) பெற்றுக்கொண்டுள்ள முற்பணத்தில் இருந்து குறிப்பிட்ட விடயத்தை விரைவாக பூர்த்தி செய்து முற்பணத்தை தீர்க்க வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது 28 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 2,772,704 தொகைக்கான முற்பணத்தினைத் தீர்ப்பதற்கு 47 நாட்கள் முதல் 326 நாட்கள் வரையான காலம் நடத்திருந்தது.<br><br>(ii) ஒரு தடவை வழங்கப்படக் கூடிய உச்ச அளவு முற்பணம் ரூபா 100,000 தொகை எனினும் நிறுவனத்தினால் ரூபா 149,940 இல் இருந்து ரூபா 658,103 தொகை வரை வீச்சில் மீளாய்வாண்டின் போது 07 சந்தர்ப்பங்களில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2004 ஜனவரி 26 ஆம் திகதிய 2004/புச/01 இலக்கம் கொண்ட தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைச் சபையின் சுற்றறிக்கை | வருடாந்த நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்தல் ஒன்று நடத்தப்பட வேண்டுமெனினும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 380,885,509 இற்கான நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் தொடர்பாக 2016 ஆண்டிற்காக வருடாந்த புத்தகங்கள் மெய்மையாய்தல் நடத்தப்பட்டிருக்கவில்லை. |

(உ) 2015 செப்தெம்பர் 18 ஆம் திகதிய 13/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை

போக்குவரத்து வசதிகளை உரித்துடைய பதவி ஒன்றில் இல்லாத சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவருக்காக (சிரேஷ்ட மாணவ ஆலோசகர்) 2015 ஆண்டு முதல் வாகனம் ஒன்று மற்றும் மாதாந்தம் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த எரிபொருளின் பெறுமதி ரூபா 337,720 தொகையாகும்.

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்காத சிரேஷ்ட சட்ட ஆலோசகர் பதவிக்காக 2015 செப்தெம்பர் 09 ஆந் திகதி நடைபெற்ற 499 ஆவது நிருவாகக் குழுக் கூட்டத்தில் எடுத்திருந்த தீர்மானமொன்றின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது நிருவாக நிதியத்தில் இருந்து ரூபா 1,050,000 தொகை செலுத்தியிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 176,157,091 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்ன் மிகை ரூபா 326,038,151 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகள் ரூபா 149,881,060 தொகையினால் வீழ்ச்சியடைந்திருந்தது. அரசாங்க மானியம் ரூபா 338,034,192 தொகையினால் அதிகரித்திருந்த போதிலும் ஊழியர் ஊதியம் ரூபா 444,958,302 இனால் மற்றும் ஏனைய மேலதிகச் செலவுகள் ரூபா 343,767,748 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை மிகை, தளம்பளுடன் வளர்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசுக்கு செலுத்திய வரிகள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த போது பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 2012 ஆண்டு முதல் இடையறாது வளர்ச்சியடைந்து 2016 ஆண்டளவில் ரூபா 2,968,791,856 தொகையாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றுகை

பல்கலைக்கழகத்தினால் வழங்கியிருந்த தகவல்களின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் குறிக்கோளாவன கற்பித்தல் விடயங்களுக்காக நவீன தொழிநுட்பங்களை பயன்படுத்துதல், கல்வி பாடநெறியிகளின் தரம் சர்வதேச மட்டம் வரையும் உயர்த்துதல், உயர்ந்த ஆய்வு மட்டமொன்றினை ஏற்படுத்துவதற்கான வசதிகளை விசாலமாக்குதல் பல்கலைக்கழத்தின் சமூகம் சார் சுற்றுச் சூழல்களை உயர்த்துதல், கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரின் திறமைகளை வலுப்படுத்துதல், முகாமைத்துவ முறைமையினை உயர்த்துதல் மற்றும் சமூகம்சார் நலன்களுக்காக அறிவு மற்றும் அனுபவத்தை பயன்படுத்துதல்.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 முதல் 2020 வரையான காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரதான செயலாற்றுகை தேர்வு முறையாக சுட்டிக்காட்டியிருந்த 06 தேர்வு முறைகள் தொடர்பாக கணக்காய்வின் போது கவனம் செலுத்தப்பட்டதுடன் அவ்விடயங்களாவன நிர்மாண வேலை ஒத்துழைப்புக்காக நிர்மாண வேலை பரப்பில் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கைகள் ஏற்படுத்துதல், பகிரங்க கருத்தரங்குகள் நடாத்துதல், கல்வி பதவியணியினரால் நூற்கள் வெளியிடுதல், பல்கலைக்கழக கல்வி பதவியணியினர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வெளிநாட்டு பிரயாணங்கள் மேற்கொள்ளல், முதுமானிப் பட்ட மாணவர்களின் ஆய்வு துண்டுப்பிரசுரங்களை சமர்ப்பித்தல் மற்றும் சர்வதேச போட்டிகளுக்காக மாணவர்களை அனுப்புதல் ஆகிய தேர்வு முறைகளின் முன்னேற்றம், 8 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் குறைந்த பெறுமதியில் காணப்பட்டதுடன் அத் தேர்வு முறைகளின் கீழ் செயலாற்றுகை முன்னேற்றத்தை அதிகரிப்பது தொடர்பாக மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(ஆ) உலக தரப்படுத்தல்களின் கீழ் 2015 ஆண்டின் போது 2034 ஆம் இடத்தில் இருந்த கொழும்பு பல்கலைக்கழகம் 2016 அளவில் 2171 ஆம் இடம் வரை வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது விஞ்ஞான பீடம் மற்றும் மருத்துவ வீடத்திற்காக சேர்க்கப்படக் கூடியாகவிருந்த அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2015 பேர்களாக இருந்த போதிலும், 1793 மாணவர்களே சேர்க்கப்பட்டிருந்தமையால் மாணவர்கள் 222 பேர் பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கப்படும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளன என அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்காக கலைபீடத்திற்கு அனுமதி பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 550 பேர் என குறிப்பிட்டிருந்த போதிலும் அம்மூன்று வருடங்களிலும் முறையே 596 பேர், 739 பேர் மற்றும் 692 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தமையால் 03 வருடங்களிலும் அனுமதிக்கப்பட்ட மேலதிக மாணவர்கள் எண்ணிக்கை 377 பேர் ஆகும். பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை பல வருட காலத்திற்கு முன்னர் தீர்மானித்திருந்ததுடன் அந்த எண்ணிக்கை காலத்திற்கு பொருத்தமான விதத்தில் திருத்துவதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்காமை இதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பௌதீக புத்தக மெய்மையாய்தலின் பிரகாரம் ரூபா 3,292,524 தொகை பெறுமதியான 27,367 புத்தகங்கள் காணாமல் போயிருந்தது. மீளாய்வாண்டின் போது 3298 புத்தகங்களின் பெறுமதியாகிய ரூபா 499,628 தொகை கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டதைத் தவிர அது தொடர்பாக வேறு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்திற்கு வழங்கியிருந்த அரச மூலதன மானியங்களில் ரூபா 140,910,000 தொகை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதியாக இருந்ததுடன் அதில் அடங்கியிருந்த ரூபா 107,590,000 தொகை கடந்த பல வருட காலமாக குறிப்பிட்ட குறிக்கோளுக்காக செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

## 4.3 தொழிற்படு செயற்பாடுகள்

உரிய முறையால் எதிர்வு கூறக் கூடிய செலவு மதிப்பீடொன்று இன்றி முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 297,750 தொகைக்கான செலவுகளுக்காக 41 சந்தர்ப்பங்களில் ரூபா 761,350 இற்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவனத்தினால் நடத்தப்படும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 29 நிதியக் கணக்குகள் தொடர்பான கூட்டுத்தொகை 23,863,768 தொகை குறிப்பிட்ட விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான இருப்பு மெய்மையாய்தல் அறிக்கையின் பிரகாரம் களஞ்சியத்தில் அசையாத இருப்பு மற்றும் மெதுவாக அசையும் இருப்பு முறையே ரூபா 165,518 தொகை மற்றும் ரூபா 259,760 தொகையாக இருந்தது.

(இ) நூலகத்தில் இருந்து புத்தகங்கள் மோசடியான முறையில் வெளியே கொண்டு செல்வதை தடுப்பதற்காக நூலக வாயிலில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பான மின்வலுப்படலை 2016 பெப்ரவரி 08 திகதி முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2017 மே 09 திகதி வரை ஒரு வருடத்தை மிகையான காலம் முதல் செயற்படாமல் காணப்பட்ட போதிலும் அதனை பழுதுபார்த்திருக்கவில்லை.

## 4.5 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடவடிக்கை முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்படும் புத்தகசாலையை வாடகைக்கு கொடுக்கும் போது பெறுகைகள் நடைமுறையில் இருந்து விளகி வாடகையாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். புத்தக நிலையம் நடத்தப்படும் 685 சதுர அடி கட்டிடத்தின் பெறுமதியை மதிப்பீட்டு வாடகையின் மீது கவனத்தை எடுக்காமல் 2008 செப்தெம்பர் முதல் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதியில் ஒரே நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுத்திருந்தமையால் ரூபா 966,668 இற்கான வருமானம் ஒன்றினை இழந்திருந்தது. மேலும், அவ்வளாகத்தில் அமைந்துள்ள வங்கி ஒன்றில் இருந்தும் மற்றும் இரண்டு பால் விற்பனை நிலையங்களில் இருந்தும் வாடகை ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 மார்ச் 15 முதல் 2018 மார்ச் 14 திகதி வரையான காலப்பகுதிக்காக பல்கலைக்கழகங்களில் பாதுகாப்பு சேவை வழங்கப்படுவது தொடர்பாக விலைகூறல் அழைப்பதற்காக தயாரித்திருந்த நியமக் குறியீடுகளில் பல்கலைக்கழகங்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் தொடர்பாக 03 வருட அனுபவத்தை பூர்த்தி செய்து இருக்க வேண்டுமென உட்படுத்தியிருந்த நிபந்தனையின் காரணமாக சமர்ப்பித்திருந்த விலைகூறல்களில் இருந்து 03 விலைகூறல்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதில் அடங்கியிருந்த இரண்டாவது குறைந்த கூறுவிலையாகிய ரூபா 41,288,400 இற்கான கூறுவிலை சமர்ப்பித்திருந்த விலைகூறல் நிராகரிக்கப்பட்டிருந்தமையால் ஐந்தாவது குறைந்த கூறுவிலையாகிய ரூபா 44,454,896 இற்கான விலைகூறல் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு பெறுகைகளை வழங்குவதற்கு நேரிட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு வருடத்திற்காக ரூபா 3,666,496 தொகை வீதம் 2016 மார்ச் முதல் 2018 மார்ச் மாதம் வரை ரூபா 7,332,992 இற்கான தொகையொன்று மிகையாகச் செலுத்த நேரிட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தில் 05 மாடிகளைக் கொண்ட சுஜாதா ஜயவர்தன மகளிர் விடுதியில் 50 மலசலகூடங்கள் மற்றும் 30 குளியல் அறைகள் நவீன மயப்படுத்துவதற்காக ரூபா 25,359,367 இற்கான (பெறுமதி கூட்டிய வரியுடன்) தொகைக்கு தனியார் கம்பனியொன்றுடன் 2013 திசெம்பர் 24 திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. வேலைகள் தாமதித்ததன் காரணமாக 2015 ஜூன் 16 திகதி பல்கலைக்கழகத்தினால் குறிப்பிட்ட ஒப்பந்த உடன்படிக்கையை இரத்து செய்வதாக ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.4.8 இன் பிரகாரம் பெற்றிருந்த ரூபா 1,132,114 தொகை பெறுமதியான செயலாற்றுகை பிணை முறி, செல்லுபடியாகும் காலம் முடிவடைய முன்னர் பல்கலைக்கழகத்திற்கு அறவிடக் கூடியதாக இருந்த போதிலும் அதனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

மேற் கூறிய ஒப்பந்த உடன்படிக்கையை இரத்து செய்த பின்னர் ரூபா 11,197,072 தொகைக்கான மீதியான வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக பெறுகைகள் நடைமுறையை கடைபிடித்து ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்வதற்குப் பதிலாக, 2015 ஆண்டில் நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர் 5 பேருக்கு 5 மாடிகளிலும் காணப்பட்ட மீதியாக காணப்பட்ட நிர்மாண வேலைகளை வெவ்வேறாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சுஜாதா ஜயவர்தன விடுதியின் பழைய கட்டிடம், ஹவ்லொக் விடுதியின் பழைய கட்டிடங்கள், ப்லொட் போமேன் விடுதியின் முன்பக்க கட்டிடத்தின் தரைமாடி மற்றும் பின்பக்க மத்திய கட்டிடங்களை பழுதுபார்த்தல் தொடர்பாக முகாமையின் கவனம் உரிய முறையில் செலுத்தப்பட்டிருக்காமையால் இவ்விடுதி பாவணைக்கு பொருத்தமில்லாத நிலைமை ஒன்று காணப்பட்ட போதிலும் அவற்றில் மாணவர்கள் தங்கி இருந்தாக அவதானிக்கப்பட்டது.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 325 வெற்றிடங்கள் காணப்பட்டன. கலாநிதி வெற்றிடங்கள் 111 காணப்பட்டமையால் வெளி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வெளி விரிவுரையாளர்கள் 379 பேர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 29,406,870 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) காலத்திற்கு ஏற்ப முக்கியமற்ற 05 தட்டச்சாளர் பதவிகள் மற்றும் 17 சுருக்கெழுத்தாளர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அப் பதவிகளுக்கு பதிலாக காலத்திற்கு ஏற்ப முக்கியமான பதவிகளை உருவாக்குவது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 20 செலவு விடயங்களை பாதீட்டுச் செலவு மற்றும் உள்ளவாறான செலவு இடையே 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் எடுக்கப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | ஆதனங்களின் உரிமையை உறுதிப்படுத்தியிருக்காமை, சொத்துக்கள் பராமரித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான பலவீனங்கள் காணப்படாமை. |
| (ஆ) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | நிதியங்கள் பேணல் | நிதியங்கள் ஆக்கப்பட்ட குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்தப்படாமை. |
| (ஈ) | ஒப்பந்த நிருவாகம் | உரிய கோவைகள் முறைப்படி பேணப்படாமை மற்றும் மேற்பார்வை பலவீன மட்டத்தில் காணப்படல். |
| (உ) | பதவியணியினர் நிருவாகம் | கல்விசார் பதவியணியினரின் உள்வருதல் பதிவு செய்யாமை. |
| (ஊ) | நூலக நிருவாகம் | முறைசார் விதமாக நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்தல் மேற்கொள்ளப்படல் மற்றும் ஒப்பீட்டு ரீதியான பதிவேடுகள் முறைப்படி பேணப்படாமை. |
| (எ) | செயற்படு நிருவாகம் | மாணவர்களுக்கு கல்வி விடயங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான சுற்றாடல் ஒன்று காணப்படும் விதத்தில் விடுதிகளை நடாத்தப்படாமை. |